**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.20/2025

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 27.06.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.2– சுரேஷ்குமார் த/பெ பழனியப்பன்</u>**

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். ராணுவத்தில் பணியாற்றி வருகிறேன். எனது அப்பா பெயர் பழனியப்பன் ஆகும். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் வீரியப்பெருமாள், மனோகரன் ஆகும். மனோகரன் எனது சித்தப்பா உயிருடன் உள்ளார். எனது அப்பா இறந்துவிட்டார். எனது உயிருடன் இருக்கும்போது எனது அப்பா, வீரியப்பெருமாள், மனோகரன் ஆகியோர்களுடன் 2001 ம் ஆண்டு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள ஏ அட்டவணைச்சொத்து தான் எனது தந்தைக்கு பிரிந்தது என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏ அட்டவணைச் சொத்துதான் இவ்வழக்கில் தாவா சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ அட்டவணைச்சொத்து மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால் 8 ஏக்கர் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண். 284/1 ஏ, மற்றும் 283 லும் வரும் சரியாகத் தெரியவில்லை போத்துராவுத்தன்பட்டியில் உள்ளது. மேற்படி சர்வே எண்கள் ஒரே கிராமத்தில் உள்ளதா என்றால் போத்துராவுத்தன்பட்டி, பஞ்சப்பட்டியில் உள்ளது.

3. தாவாசொத்து எனது அப்பாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது அப்பாவுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி மகாலட்சுமி அவருக்கு பிறந்தவர்கள் நானும் எனது சகோதரர் சுரேந்தர் ஆகும். இரண்டாம் மனைவி பெயர் தமிழரசி 1 ம் பிரதிவாதி ஆவார். தமிழரசிக்கு பிறந்தவர்கள் மஞ்சுளா, மதுரா 3, 4 ம் பிரதிவாதிகள் ஆவார்கள். எனது அப்பா தாவா சொத்தை பொறுத்து ஆவணங்கள் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அம்மா எனது அப்பா இறக்கும் முன்பு இறந்துவிட்டார்.

4. எனது அப்பாவிற்கு நான், எனது தம்பி 1ம் பிரதிவாதி தமிழரசி, 2, 3 பிரதிவாதிகள் வாரிசு என்றால் சரிதான். எனது அப்பாவின் வாரிசு என்ற அடிப்படையில் 1ம் பிரதிவாதி தமிழரசிக்கு பாகம் உண்டா என்றால் உண்டு. தாவா சொத்தை பொறுத்து பாகப்பத்திரத்தில் 4 பாகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல நாங்கள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. 4 பாகத்தில் 2, 3 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பாகத்தைத்தான் 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

5. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அம்மாவின் சொத்து எங்களுக்கு வேண்டும் என்றும் எங்களுக்குள் பாகப்பிரிவினை இல்லாத போது அவர்கள் எழுதிக்கொடுத்தது சரியல்ல. தாவா சொத்தில் தற்போது அனுபவத்தில் உள்ளார் என்றால் அதிகபட்ச இடத்தில் அவர்கள் தான் உள்ளார்கள். மஞ்சுளா மற்றும் மதுரா ஆகியோர்கள் அவர்களுக்குரிய பாகத்தைத்தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யகோரமுடியாது என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.